தினமலர்

www.dinamalar.com
மதுரை
• சனி • செப்டம்பர் 4 2021

## சிறுதானிய தின்பண்டம் தயாரிப்பு பயிற்சி

**மதுரை, செப். 4–**

மதுரை விவசாய கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சிறுதானியங்களில் தின்பண்டங்கள் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. உணவு தயாரிப்பு குறித்து உதவி பேராசிரியர் ஆரோக்கிய மேரியும் அதிலுள்ள சத்துகள் குறித்து உதவி பேராசிரியர் செல்வராணியும் விளக்கினர்.

SHOT ON REDMI NOTE5 PRO
MI DUAL CAMERA
2021/9/6 10:13

# இயந்திரங்கள் பழுது நீக்கும் பயிற்சி முகாம்

**மேலூர், செப். 16 –** மதுரை வேளாண்மை கல்லூரி வேளாண் அறிவியல் மையத்தில் ஊரக இளைஞர் உழவர்களுக்கான பண்ணை இயந்திரங்கள் பராமரிப்புமற்றும் பழுது பார்த்தல் பயிற்சி முகாமில் ஏராளமான விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

உதவி இயக்குநர் செல்வி வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குநர்விவேகானந்தன் தலைமை வகித்தார். மாவட்ட செயற்பொறியாளர் சுரேஷ்குமார், துணை இயக்குநர் சிவஅமுதன், கலெக்டரின் நேர்முகஉதவியாளர் தனலட்சுமி, இணை இயக்குநர் லட்சுமி பிரபா, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஹேமலதா, உழவியல் துறை பேராசிரியர் செல்வி ஆகியோர் வேளாண்மையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், செயல்பாடுகள், பண்ணை இயந்திரங்களை பராமரிப்பது மற்றும் பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து பேசினர்.

9:21 0.00 KB/S Vo LTE 4G 34

Preview



# ஊட்டச்சத்துமிக்க தோட்டம் மற்றும் மரம் நடும் விழா

மதுரை, செப்.17

சர்வதேச சிறு தானிய ஆண்டு 2023யை முன்னிட்டு, ஊட்டச்சத்துமிக்க தோட்டம் மற்றும் மரம் நடும் விழா வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 17.09.2021 அன்று நடத்தப்பட்டது. இவ்விழாவில் வேளாண்மை அறிவியில் நிலைய திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் மு.ஹேமலதா, வரவேற்புரையாற்றினார். இந்த விழாவிற்கு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் வி.கு.பால்பாண்டி, தலைமையேற்று ஆரோக்கியமான வாழ்விற்கு சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றி னார். சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் சு.அமுதா, வீட்டுக்காய்கறி தோட்டத்தின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் த.விவேகானந்தர், மதுரை மாவட்டத்தில் சிறுதானிய பயிர்களின் பரப்பளவை அதிகரிக்க வேண்டும் என்று தனது சிறப்புரையில் குறிப்பிட்டார். எஸ்.திருப்பதி, கொடிகுளம் மன்றத் தலைவர், வீட்டுக்கு ஒரு மரம் நடுவதன் மூலம் இயற்கையை பாதுகாக்க வேண்டும் என்று தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டார். சி.சரவணக்குமார், மேலாளர் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், மண் வளத்தை பாதுகாக்க மண் ஆய்வு செய்து தேவையான சத்துக்களை இட வேண்டும் என தனது வாழ்த்துரையில் தெரிவித்தார். மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், தேசிய அளவில் இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை விவசாயிகளுக்கு நேரடி ஒளிபரப்பு செய்யபட்டு விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. முனைவர் குமார், பேராசிரியர் மற்றும் தலைவர் தோட்டக்கலைத்துறை, முனைவர் விஜயலெட்சுமி இணைப்பேராசிரியர், மனையியல் துறை, மரம் நடுதல், சிறுதானிய உணவுகளின் முக்கியத்துவம் குறித்து சிறப்பு வகுப்புகள் நடத்தினர். விழாவில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த 68 இளங்கலை மாணவியர் மற்றும் 70 மதுரை மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு பூவரசு, சரக் கொன்றை, அரசு, நீர் மருது, மற்றும் தான்றிக்காய் மற்றும் போன்ற 500 மரக்கன்றுகள், 100 காய்கறி விதைகள் வழங்கப்பட்டன. வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 500 மரக்கன்றுகள் நடப்பட்டன. விவசாயிகள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு சத்தான சிறுதானிய உணவுகள் வழங்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.



# கல்லல் வட்டாரத்தில் ட்ரோன் மூலம்

Layout Select area Share

# விலை மலிவு என்பதால் யூரியாவை அள்ளி பயிருக்கு கொடுக்காதீங்க

மதுரை, செப். 18–

''விலை மலிவாக கிடைக்கிறது என்பதற்காக பயிருக்கு யூரியாவை அள்ளி அள்ளி போட்டால் மண்வளம், மகசூல் பாதிக்கப்படும்,'' என, மதுரையில் நடந்த வேளாண் அறிவியல் நிலைய கருத்தரங்கில் இப்கோ மேலாளர் சரவணகுமார் தெரிவித்தார்.

ஊட்டச்சத்து நிறைந்த தோட்டம் அமைப்பது குறித்து இக்கருத்தரங்கு விவசாய கல்லூரியில் நடந்தது. நிலைய ஒருங்கிணைப்பாளர் ஹேமலதா வரவேற்றார். டீன் பால்பாண்டி தலைமை வகித்தார்.

வேளாண்மை இணை இயக்குனர் விவேகானந்தன் பேசுகையில்,''மாவட்டத்தில் 34ஆயிரம் எக்டேராக சிறுதானிய பரப்பளவு அதிகரித்துள்ளது. கல்லுப்பட்டி, சேடபட்டியில் மானாவாரியில் சிறுதானியம் அதிகம் பயிரிடுகின்றனர்.

மதுரையில் 1500 எக்டேரில் குதிரைவாலி பயிரிடப்படுகிறது,'' என்றார்.

இப்கோ மேலாளர் சரவணகுமார் பேசியதாவது: நாட்டில் உணவு மானியத்துக்கு அடுத்தபடியாக உர மானியத்துக்கு தான் மத்திய அரசு அதிகம் செலவிடுகிறது. யூரியாவிற்கு மட்டும் ரூ.60ஆயிரம் கோடி மானியம் தரப்படுகிறது.

உரம் மலிவாக கிடைக்கிறது என்பதற்காக யூரியாவை மூடை மூடையாக பயிர்களுக்கு கொட்டினால் மண்வளம் பாதிக்கப்படும் என்றார்.

தோட்டக்கலைத் துறைத்தலைவர் குமார், இணைப் பேராசிரியை விஜயலட்சுமி பேசினர். உதவி பேராசிரியை ஆரோக்கியமேரி நன்றி கூறினார்.

10:18
Done



# மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்

மதுரை, செப்.28

மதுரை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காலநிலை மாற்றத்திற்கேற்ற இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் செவ்வாய்க் கிழமை அன்று நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.ஹேமலதா, துவக்க உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடியின் உரை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. மண்ணியல் துறை முனைவர் சீ.கிருஷ்ணகுமார், மண் மற்றும் நீர் மேலாண்மை குறித்தும், தோட்டக்கலைத்துறை முனைவர் மு.பழனிக்குமார், பருவநிலை மாற்றத்திற்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களின் ரகங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். பயிர் நோயியல் துறை முனைவர் மாரீஸ்வரி, நெல், பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களில் நோய் மேலாண்மை குறித்து உரையாற்றியதுடன் நோய் மேலாண்மை குறித்த சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். நிகழ்ச்சியில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 100 விவசாயிகள், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இளங்கலை மாணவ, மாணவியர், வேளாண் அறிவியல் நிலைய அனைத்துத் தொழில்நுட்ப வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.




Text editor
Edit picture
Fill Form
Annotation